# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.122/2025

**Deposition of Witness for Prosecution PW 19**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராணி | Husband's Name | : | முருகேசன் |
| Village | : | வடபாதிமங்கலம் | Taluk | : | வடபாதிமங்கலம் |
| Calling | : | | Age | : | 45 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 18th day of February 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடபாதிமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். திருவாரூர் தாலுகா காவல் நிலைய ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்தபோது திருவாரூர் தாலுகா காவல் நிலைய கு.எண் 153/2025 வழக்கு கோப்பினை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 02.05.2025 அன்று காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சதீஷ்குமார், தர்மலிங்கம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:51:38 +0530

தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.12**. 02.05.2025 அன்று காலை 7.30 மணி முதல் காலை 9.00 மணி வரை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.13**. 02.05.2025 அன்று கிராம நிர்வாக அலுவலர் ராஜேஷ்வரி, சாட்சிகள் கலையரசன், மாரியப்பன், கனிமொழி, சதீஷ்குமார், தர்மலிங்கம், தினகரன், சிவசாமி, அன்புசெல்வன், ரமேந்திரன், விநாயகசெளத்திரி ஆகியோர்களை விசாரித்தும் 03.05.2025 அன்று சாட்சிகள் வீரதேவா, ரவீந்திரன் ஆகியோர்களை விசாரித்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 11.05.2025 அன்று கடுவங்குடி கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் எதிரி சவிதா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதில் என்னை அழைத்து சென்றால் என் கணவரை கையால் கழுத்தை நெறித்து போஸ்ட் மரத்திலிருந்து வந்த கம்பியை பிடித்து எனது கணவரின் கழுத்தை இறுக்கி மதகிலிருந்து கீழே தள்ளிவிட்டு கொலை செய்த இடத்தையும் அவரை எப்படி கொலை செய்தேன் என்ற விபரத்தையும் என் கணவர் போட்டிருந்த செருப்பை எடுத்து மறைத்து வைத்திருந்ததை தங்களிடம் எடுத்து ஆஜர் செய்கிறேன் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:51:44 +0530

அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.14** (அ.சா.ஆ.14 யை குறியீடு செய்வதற்கு எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. AIR 2001 SC 1158 தீர்ப்புரையை பின்பற்றியும் நீதியின் நலன் கருதியும் குறியீடு செய்யப்படுகிறது). இறந்துபோன அனந்த பத்மநாபனின் கழுத்தில் இறுக்கிய காயம் இருந்ததால் இறப்பில் சந்தேகம் ஏற்பட்டு விசாரணையில் இருந்துவந்த நிலையில் 11.05.2025 அன்று காலை 10.00 மணிக்கு இவ்வழக்கில் இறந்த அனந்தபத்மநாபனின் மனைவி சவிதா கடுவங்குடி கிராம நிர்வாக அலுவலரிடம் நேரில் ஆஜராகி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையிலும் கடுவங்குடி கிராம நிர்வாக அலுவலர் திருவாரூர் தாலுகா காவல் நிலையத்தில் எதிரி சவிதாவுடன் ஆஜராகி 12.00 மணிக்கு அளித்த பரிந்துரை கடிதத்தின் பேரிலும் பகல் 12.30 மணிக்கு இவ்வழக்கின் சட்டப் பிரிவினை பாநிச பிரிவு 194 லிருந்து பாநிச பிரிவு 103 ஆக சட்டப் பிரிவு மாறுதல் செய்து அறிக்கை சமர்ப்பித்தேன். அந்த சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.15**. அன்றைய தினமே 15.45 மணிக்கு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் எதிரி சவிதா பூதமங்கலசேரி வாய்கால் முட்புதரில் மறைத்து வைத்திருந்து எடுத்து ஆஜர் செய்த சா.பொ.1 யை அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். சா.பொ.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.16**. 11.05.2025 அன்று கிராம உதவியாளர் சுசீலாவை விசாரித்து வாக்குமூலம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:51:55 +0530

பதிவு செய்தேன். 12.05.2025 அன்று பகல் 12.30 மணிக்கு சம்பவ இடமான பூதமங்கலச்சேரி மதகடி அருகிலிருந்த மின் கம்பத்திலிருந்து சாட்சிகள் ஸ்டாலின், சந்தோஷ்ராஜ் ஆகியோர் முன்னிலையில் சுமார் 172 செ.மீ. நீளமுள்ள மின்கம்ப Stay இரும்பு கம்பியை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.7 ஆகவும் இரும்பு கம்பி சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சா.பொ.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.17**.

**குறுக்கு விசாரணை**

05.05.2025 அன்று இந்த வழக்கின் முதல் தகவலறிக்கை நீதிமன்றத்திற்கு சென்றடைந்துள்ளது என்றாலும் காலதாமதத்திற்கான எந்த சிறப்பு காரணமும் இல்லையென்றாலும் சரி. வழக்கில் இறந்தவரின் உறவினர் யாரும் புகார்தாரர் இல்லை என்றால் சரி. இறந்தவரின் மகனை தவிர வேறு உறவினர் யாரும் இந்த வழக்கில் சாட்சியாக இல்லையென்றால் சரி. எங்களிடம் ஆஜர் எதிரி எந்தவிதமான வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரி. முதல் தகவலறிக்கை பதிவு செய்த பின்னர் ஆஜர் எதிரி கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் கொடுத்ததாக உள்ள சங்கதி தொடர்பாக இந்த வழக்கை வலு சேர்ப்பதற்காக பின் யோசனையிட்டு உருவாக்கப்பட்ட ஆவணம் எனவும் சொன்னால் தவறு. நடந்ததாக சொல்லப்படும் சம்பவ இடத்தை சுற்றியுள்ள நபர்கள் யாரும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:52:02 +0530

சாட்சியாக இல்லை என்றால் சரி, பக்கத்தில் வீடுகள் எதுவுமில்லை. விவசாய நிலங்கள் வைத்திருப்பவர்களும் சாட்சியாக இல்லை. செருப்பு கைப்பற்றப்பட்டதாக சொல்லக்கூடிய இடம் திறந்த வெளி என்றால் சரி, அது சம்பவ இடம். இவ்வழக்கில் இறந்தவர் மதுவிற்கு அடிமையானவர் என்ற விபரத்தை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாருமில்லை என்றால் சரி. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை எனவும் எதிரியிடமிருந்து சான்று பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. வீட்டிலிருந்த எதிரியை சுமார் 10 நாட்கள் காவல் நிலைய கட்டுப்பாட்டில் வைத்திருந்து வழக்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டி எதிரியை தொடர்புபடுத்தி ஆவணங்கள் தயார் செய்துள்ளேன் என்றால் தவறு. எதிரிக்கும் வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:52:10 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.122/2025

**Deposition of Witness for Prosecution PW 20**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயந்தி | Husband's Name | : | நடராஜன் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | திருவாரூர் |
| Calling | : | | Age | : | 42 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 17th day of February 2026.**

**(Accused present / absent. For petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போதும் திருவாரூர் தாலுகா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். திருவாரூர் தாலுகா காவல் நிலைய கு.எண் 153/2025 வழக்கு கோப்பினை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 19.05.2025 அன்று சாட்சிகள் மதியழகன், ராமகிருஷ்ணன், 2ம் நிலை காவலர் மணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 23.06.2025 அன்று சாட்சிகள் ஸ்டாலின், சந்தோஷ்ராஜ், சுரேஷ், டாக்டர் ஹரிபிரசாத், டாக்டர் நஷீராபேகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.18 15:52:18 +0530

முடித்து 05.07.2025 அன்று எதிரி மீது பாநிச பிரிவு 103 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் சிவசாமி, வினாயகசௌத்திரி, ரவீந்திரன், சுரேஷ், மதியழகன், ராமகிருஷ்ணன் ஆகியோர் சம்பவம் பற்றி கூறியதையே நான் வாக்குமூலங்களாக பதிவு செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் தவறு. சந்தேகத்தின் அடிப்படையில் வழக்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டி எதிரி மீது புனையப்பட்ட பொய் வழக்கு எனவும் சம்பவ இடம் செல்லாமலும் சாட்சிகளை விசாரணை செய்யாமலும் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. அதனால்தான் வழக்காவணங்கள் அனைத்தும் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு சென்றடைந்துள்ளது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:52:26 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.